**சுருக்கம்**

சீர்மரபினர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் – பதிவு பெற்ற உறுப்பினர்கள் – பதிவு புதுப்பித்தல் காலம் 31.12.2020 வரை நீட்டிப்பு – ஓய்வூதியம் பெறும் உறுப்பினர்கள் – வாழ்நாள் சான்று கோருவதில் 31.12.2020 வரை விலக்கு அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை**

அரசாணை (நிலை) எண். 75 நாள்: 14.10.2020

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி – புரட்டாசி 28

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண். 13, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 20.04.2007.
2. அரசாணை (நிலை) எண். 29, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 28.03.2008.
3. அரசாணை (நிலை) எண். 60, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 27.05.2008.
4. அரசாணை (நிலை) எண். 87, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 08.08.2008.
5. அரசாணை (நிலை) எண். 90, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 12.08.2008.
6. அரசாணை (நிலை) எண். 44, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 03.06.2020.
7. அரசாணை (நிலை) எண். 147, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள். 04.09.2020.
8. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் கடித எண். எப்1/3021/2020, நாள். 25.09.2020.

* * * * *

**ஆணை:**

மேலே ஒன்றாவது மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் சீர்மரபினர் நல வாரியமும், மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியமும் அமைக்கப்பட்டு, இவ்வாரியங்களில் பதிவு செய்துக் கொள்ளும் உறுப்பினர்களுக்கு அமைப்புச் சாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதுப் போன்று பல்வேறு நலத் திட்டங்கள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே நான்கு மற்றும் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் முறையே, தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் 3 ஆண்டுகள் முடிவடையும் தருவாயில் உறுப்பினர் பதிவை புதுப்பிக்க வேண்டும் என்றும் மற்றும் சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் 2 ஆண்டுகள் முடிவடையும் தருவாயில் உறுப்பினர் பதிவை புதுப்பிக்க வேண்டும் என்றும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. மேலே ஆறாவதகாப் படிக்கப்பட்ட அரசாணையில் சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் காலம் 2 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாவும், நரிக்குறவர் நல வாரிய பதிவு பெற்ற உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் காலம் 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாவும் உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டன.

4. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறும் உறுப்பினர்களுக்கு கொரோனா நோய் தொற்று பரவல் காரணமாக தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு காலத்தில் பொது போக்குவரத்து தடையின் காரணமாக அடையாள அட்டை புதுப்பித்து கொள்வது மற்றும் வாழ்நாள் சான்று பெறுவதில் ஏற்படும் சிரமத்தினை கருத்தில் கொண்டு, புதுப்பித்தல் செய்ய வேண்டி காலமான 01.03.2020 முதல் 31.12.2020 வரை (அல்லது ஊரடங்கு உத்தரவு முடியும் வரை) இடைப்பட்ட காலத்தில் புதுப்பித்தல் செய்வதிலிருந்து விலக்கு (ஒரு தடவை) மற்றும் ஓய்வூதியம் பெறும் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் சான்று 31.12.2020 வரை கோருவதில் இருந்து விலக்கு அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

5. மேலே எட்டாவதகாப் படிக்கப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் கடிதத்தில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறும் உறுப்பினர்களுக்கு கொரோனா நோய் தொற்று பரவல் காராணமாக தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு காலத்தில் பொது போக்குவரத்து தடையின் காரணமாக அடையாள் அட்டை புதுப்பித்து கொள்வது மற்றும் வாழ்நாள் சான்று பெறுவதில் ஏற்படும் சிரமத்தினைக் கருத்தில் கொண்டு புதுப்பித்தல் செய்ய வேண்டிய காலமான 01.03.2020 முதல் 31.12.2020 வரை (அல்லது ஊரடங்கு உத்தரவு முடியும் வரை) இடைப்பட்ட காலத்தில் புதுப்பித்தல் செய்வதிலிருந்து விலக்கு (ஒரு தடவை) மற்றும் ஓய்வூதியம் பெறும் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் சான்று 31.12.2020 வரை கோருவதிலிருந்து விலக்கு அளித்ததை போன்று தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் மற்றும் சீர்மரபினர் நல வாரியத்தின் உறுப்பினர்கள் பதிவு புதுப்பித்தல் செய்ய வேண்டிய காலமான 01.03.2020 முதல் 31.12.2020 வரை (அல்லது ஊரடங்கு உத்தரவு முடியும் வரை) இடைப்பட்ட காலத்தில் புதுப்பித்தல் செய்வதிலிருந்து விலக்கு (ஒரு தடவை) மற்றும் ஓய்வூதியம் பெறும் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் சான்று 31.12.2020 வரை கோருவதிலிருந்து விலக்கு அளித்து ஆணைகள் வெளியிடுமாறு அரசைக் கோரியுள்ளார்.

6. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, சீர்மரபினர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தின் உறுப்பினர்கள் பதிவு புதுப்பித்தல் செய்ய வேண்டிய காலமான 01.03.2020 முதல் 31.12.2020 வரை (அல்லது ஊரடங்கு உத்தரவு முடியும் வரை) இடைப்பட்ட காலத்தில் புதுப்பித்தல் செய்வதிலிருந்து விலக்கு (ஒரு தடவை) மற்றும் ஓய்வூதியம் பெறும் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் சான்று 31.12.2020 வரை கோருவதிலிருந்து விலக்கு அளித்து ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
தலைவர், சீர்மரபினர் நல வாரியம்,
துணைத் தலைவர், சீர்மரபினர் நல வாரியம்,
உறுப்பினர் – செயலர், சீர்மரபினர் நல வாரியம் மற்றும்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர்,
சென்னை –5.
உறுப்பினர் – செயலர், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்
மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல
இயக்குநர், சென்னை –5.
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை– 5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
அரசு முதன்மை செயலரின் முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் துறை, சென்னை– 9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 9.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

14/10/2020
பிரிவு அலுவலர்.
14/10/2020